இராணிப்பேட்டை மாவட்டக் கழகம் சார்பில்

கழக அமைப்பு மறு சீராய்வுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, அக். 15 - இராணிப்பேட்டை மாவட்டம் நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர் கள் கவனத்திற்கு தலை மைக் கழக அறிவுறுத்தலின் படி கழக அமைப்பு மறு சீராய்வுக் கூட்டம் 17.10.2026 - சனிக்கிழமை அன்று கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

இது குறித்து மாவட்ட கழக செயலாளர் ஆர். காந்தி அறிக்கை வருமாறு:

அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி காலை 09.30 மணி OTP மஹால், நாகலம்மன் நகர், அரக் கோணம் அரக்கோணம் நகரம் , அரக்கோணம் மத் திய ஒன்றியம், அரக்கோ ணம் கிழக்கு ஒன்றியம் , அரக்கோணம் தெற்கு ஒன் றியம், நெமிலி கிழக்கு ஒன் றியம் , நெமிலி மத்திய ஒன் றியம்,



சோளிங்கர் சட்டமன் றத் தொகுதி நெமிலி தெற்கு ஒன்றிய அலுவல கம், ரெட்டிவலம், காலை 11.00 மணி நெமிலி தெற்கு ஒன்றியம், நெமிலி வடக்கு ஒன்றியம், ஆற் காடு நகரம்,

மேற்கண்ட நிகழ்ச்சி களில் தலைமைக் கழக பிரதிநிதிகள் T. செங்குட்டு வன் கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில செயலாளர், திரு. வழக்கறி ஞர் சரவணன் தலைமை கழக ஊடக பிரிவு இணை செயலாளர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே, இக்கூட்டத் திற்கு நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் நிர் வாகி கள் அந்தந்த பகுதி யில் உள்ள மாவட்ட நிர் வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள் அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டு தக்க ஆலோசனை வழங்கிட கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

ஒரு யூனிட் மின்சாரம் ரூ.37க்கு வாங்குவதால் அரசுக்கு

ரூ.1 லட்சம் கோடி நிதிச்சுமை ஏற்படும் அபாயம்!

மின்வாரியத்தின் நிதிநிலை குறித்து பொதுமக்களிடம் விவாதம் - பரபரப்பு!

சென்னை, அக்.15 - தமிழகத்தில் மின்தேவை யைச் சமாளிக்க வெளிச்சந் தையில் இருந்து 4,500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், ஒரு யூனிட் மின் சாரத் துக்கு ரூ.31.99 முதல் ரூ.37 வரை விலை குறிப்பி டப்பட்டுள்ள தாகத் தகவல் கள் வெளியாகியுள் ளன. அதிக விலைக்கு மின்சாரம் வாங்குவதால் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் நிதிச்சுமை ஏற்படும் என்ற கேள்வி எழுந்துள் ளது. இந் தத் தொகைக்கான அதிகா ரப்பூர்வக் கணக்கீடு உறு திப்படுத்தப்படாத நிலையில், மின் வாரியத்தின் நிதிநிலை குறித்த விவாதம் பொதுமக் கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு குறித்த புகார்கள் தொடர்ந்து எழுந்து வரும் நிலை யில் மின்தேவையைப் பூர்த்தி செய்யத் தனியார் நிறுவ செ னங் களிடம் இருந்து மின் சாரம் கொள் முதல் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட் டுள்ளது. கடந்த செப்டம் பர் மாதத்தில் ஒரு யூனிட் மின்சாரம் ரூ.22 முதல் ரூ.30 வரை கொள் முதல் செய் யப்பட்டதாகக் கூறப்ப டும் நிலையில், தற்போது விலை ரூ.35-ஐத் தாண் டியிருப்பது கவ னத்தை ஈர்த்துள்ளது. மின் தேவை அதிகரிக்கும் காலத்தை முன்கூட்டியே கணிக்க முடியும் என்ற நிலையில், குறைந்த விலையில் மின் சாரம் பெறுவதற் கான ஏற்பாடுகள் போதுமான அளவில் செய்யப்பட்ட னவா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஒரு யூனிட் மின் சாரத்தை ரூ.35 வரை கொடுத்து வாங்கும் போது, கொள்முதல் செலவுக்கும் - மின்விற்பனை மூலம் கிடைக் கும் வருவாய்க்கும் இடையே உள்ள வித்தியா -சம் மின்வாரி யத்தின் நிதிநி - லையைப் பாதிக் கக்கூடும். இதன் காரணமாக ஆண் டுக்கு ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் நிதிச்சுமை ஏற்படக் கூடும் என்றகணிப்பும்முன்வைக்கப்படு கிறது. இருப்பினும், இந்தத் தொகை எவ்வாறு கணக்கிடப்பட் டுள்ளது என்பதை - உறுதிப்ப டுத்த மின்சாரக் கொள்முதலின் மொத்த அளவு, ஒப்பந்த விலை, விற்பனை வருவாய், அரசு வழங் கும் மானியங்கள் மற்றும் மின் வாரியத்தின் நிதிக் கணக்குகள் உள்ளிட்ட விவரங்கள் தேவை.

மின்வாரியத்தின் செலவு அதிக ரித்தால், அதை அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு மூலம் சமா ளிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இல்லையெனில், மின்வாரி யத்தின் கடன் சுமை அதிகரிக் கும் அபாயமும் உள்ளது. மின்சாரச் செலவு உயர் வது தொழிற்சாலை கள், சிறு தொழில்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் உற்பத் திச் செலவிலும் தாக்கத்தை ஏற்ப டுத்தக்கூடும். இதன் தொடர்ச்சியா கப் பொருட்கள் மற்றும் சேவைக ளின் விலைகள் உயர்ந்தால், பொதுமக்க ளின் வாழ்க்கைச் செலவும் அதிகரிக்க வாய்ப்புள் ளது. அதேநேரத்தில், கொள்மு தல் விலை உயர் வால் உடனடி யாக மின் கட்டணம் உயர்த் தப்படும் என்று கூற முடியாது. அக்டோபர் மாத மின்தேவைக் காக 3,000 மெகாவாட் மின்சா ரம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்ட தாகவும், 2027-ம் ஆண்டு கோடைக் காலத் தேவைக்காக 2,000 முதல் 3,200 மெகாவாட் வரை மின்சாரம் வாங்கத் திட்டமி டப்பட்டுள்ளதாக வும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது கூறப்படும் 4,500 மெகாவாட் கொள்முதல் முந்தைய டெண்ட ரின் திருத்தமா அல்லது தனியான டெண் டரா என்பது குறித்தும் தெளிவான விவரங்கள் வெளியா கவில்லை. மின் சாரக் கொள்முத லுக்காக எத்தனை டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன, ஒப் பந்த நிறு வனங்கள் எவை, ஒவ்வொரு ஒப் பந்தத்தி லும் நிர்ணயிக்கப்பட்ட விலை என்ன, மொத்தச் செலவு எவ் வளவு ஆகிய விவரங்களை மின் வாரியம் வெளிப்படையாக வெளி யிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

மின்தேவையைச் சமா ளிப்ப தற்காக அவசரமாக அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கு வதை விட, தேவையை முன் கூட்டியே கணித்து நீண்ட காலத் திட்டமிடலுடன் செயல்படுவது முக்கியம். மின் உற்பத்தியை மேம்ப டுத்துதல், வெளிமாநிலங் களில் இருந்து குறைந்த விலை யில் மின்சாரம் பெறுதல், நீண்ட கால ஒப் பந்தங்களைச் சரியான முறையில் மேற்கொள்ளு தல் போன்ற நடவடிக்கை கள் மூலம் கொள்முதல் செலவைக் கட்டுப்ப டுத்த முடியும்.

எனவே, மின்சாரக் கொள்மு தல் விலை உயர் வால் ஏற்படும் உண்மை யான கூடுதல் செலவு எவ்வளவு, ஆண்டுக்கு ரூ.1 லட் சம் கோடி நிதிச் சுமையை அரசு எவ்வாறு சமாளிக்கபோகிறது, எதிர் கால மின்தேவையைச் சமா ளிக்க என்ன திட்டங் கள் உள்ளன என்பதற்கு தமிழக அரசு விளக் கம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மின்சாரம் தடை யின்றிக் கிடைப்பதுடன், அதற் காக ஏற்படும் செலவை யும் கட் டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதே பொதுமக்க ளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(13.10.2026)

1. புதுக்கோட்டை அருகே கரம்பக்குடியில் சேர்ந்து வாழ வலியுறுத்தியதால் இரண்டாவது மனைவியை கொன்று தோட்டத்தில் புதைத்த போலீஸ்காரர் ....

2. மதுரை ஒத்தக்கடை அருகே மதுபோதையில் புகைப்பிடித்த தகராறில் இரும்பு கம்பியால் டிரைவரை அடித்துக் கொன்ற கிளீனர் ...



3. சென்னை, மயிலாப்பூர் பறக்கும் ரயில் நிலையத்தில் பூட்டிய அறையில் அழுகிய நிலையில் பெண் சடலம்.. ரயில் நிலைய நடைமேடையில் மகளை காத்திருக்க சொல்லிவிட்டு, கழிவறைக்குச் சென்றவருக்கு நேர்ந்த கொடூரம் ....

4. சென்னை அம்பத்தூர் அருகே 12 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லைக் கொடுத்ததால் ஆத்திரம் , தொல்லை கொடுத்த ஆசாமியை கத்தியால் குத்தி கொன்ற வாலிபர்....



5. கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அருகே திருமண வரவேற்பில் புதுமணப் பெண்ணை தாக்கிய ராணுவ வீரர் ...

6. கன்னியாகுமரி மாவட்டம் பறக்கை அருகே திருமணத்தை மீறிய உறவுக்கு இடையூறாக இருந்த தனது குழந்தைகளை கள்ளக்காதலனுடன் சேர்ந்து கம்பால் அடித்து உதைத்தும், சிகரெட்டால் சூடு வைத்தும் சித்திரவதை செய்தும் கொடூர செயலில் ஈடுபட்ட தாய் ....

7. சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் முன்விரோதம் காரணமாக வாலிபரை மிரட்டி காரை பறித்துக் கொண்டு கொல்ல முயன்ற ரவுடி...

8. விழுப்புரத்தில் அடுத்தடுத்து பர்னிச்சர் கடை மற்றும் கார்மெண்ட்ஸ் உள்ளிட்ட கடைகளில் கதவின் பூட்டினை உடைத்து மர்மநபர்கள் கடையிலிருந்த 7 லட்சத்து 11 ஆயிரம் ரொக்க பணம் மற்றும் சி.சி.டி.வி. காட்சிகள் பதிவான ஹார்ட் டிஸ்க்குகள் திருட்டு, பொதுமக்கள் அச்சம்....



9. திருச்சி மாவட்டம் துறையூர் பாலக்கரை பகுதியில் உள்ள பேங்க் ஆப் பரோடா ஏ.டி.எம். மையத்தில் கொள்ளை முயற்சி 19 லட்சம் பணம் தப்பியது...



10. சென்னை திருவான்மியூரில் டீக்கடை ஊழியரை வழி மறித்து கத்தி முனையில் பணம் கொள்ளை ...

11. சென்னை பெரம்பூர் முதலமைச்சர் தொகுதியில் மாநகராட்சி அதிகாரிகள் அலட்சியம் காரணமாக விஷ வாயுத்தாக்கி இருவர் பலி, உடல்களை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம் ....

12. சென்னை, தியாகராயர் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் டாக்டர்கள் பணியில் இல்லாததால் நோயாளிகள் அதிர்ச்சி, சிகிச்சை பெற முடியாமல் திரும்பிய அவலம்...

13. தமிழ்நாட்டில் சென்னை மற்றும் பல்வேறு பகுதிகளில் தொடரும் மின்வெட்டு, பொதுமக்கள் அவதி, தொடரும் சாலை மறியல்கள்...

14. சென்னை கொரட்டூர் மற்றும் புழல், புளியந்தோப்பில் கஞ்சா விற்பனை படுஜோர். 7 பேர் சிக்கினர் .

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கரு. செயல்மணி

அக்டோபர் 15 (2014)



1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.

"1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்" என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி" எனவும்;

இரங்கல் செய்தியில் "இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன்?" என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மின்வெட்டு – மின் கட்டண உயர்வு! மக்கள் அவதி!

அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவது எந்த வகையில் நியாயம்?

தமிழ்நாடு எங்கே செல்கிறது? என பிரேமலதா விஜயகாந்த் கேள்வி!



சென்னை, அக்.15 - "மின் உற்பத்தித் திட் டங்களை முன்னெடுப் பதை விடுத்து, மின்கட் டணத்தை உயர்த்துவ தும், மின்வெட்டுக்கு வழிவகுப்பதும், தனியா ரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதும் மக்களின் சுமையை மேலும் அதிக ரிக்கும்" என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில், "கடந்த காலங்க ளில் ஒரு யூனிட் மின்சா ரத்தை ரூ.13க்கு கொள்முதல் செய்த நிலையில், மின்மிகை மாநிலமாக இருந்த தமி ழகத்தில் தற்போது ஒரு யூனிட் மின்சாரத்தைத் தனியாரிடம் இருந்து ரூ.35க்கு கொள்முதல் செய்ய வேண்டிய அவசி யம் என்ன?

தமிழகம் எந்தத் திசையை நோக்கிச் செல் கிறது என்ற கேள்வியை இன்று மக்கள் எழுப்பி வருகின்றனர்.

ஒரு புறம் மின் வெட்டு, மறுபுறம் மின் கட்டண உயர்வு என மக்கள் பல்வேறு சிரமங் களைச் சந்தித்து வரும் நிலையில், தனியாரிடம் இருந்து ஒரு யூனிட் மின் சாரத்தை ரூ.35 என்ற அதிக விலைக்கு வாங்கு வது எந்த வகையில் நியா யமானது? இதற்குத் தமி ழக அரசு உரிய விளக்கம் அளிக்க வேண்டும்.

ஏற்கெனவே மின்சா ரத் துறை கடன் சுமை யில் இருக்கும் நிலை யில், தமிழகம் சுமார் ரூ.10 லட்சம் கோடி கட னில் இருப்பதாகக் கூறப் படும் சூழலில், தனியாரி டம் தொடர்ந்து அதிக விலை கொடுத்து மின்சா ரம் வாங்குவதன் மூலம் மேலும் நிதிச் சுமையை ஏற்படுத்துவது எதற் காக?

இந்தக் கொள்முதல் நடவடிக்கையின் அவசி யம், விலை நிர்ணயம் மற்றும் அதன் பின்னணி யில் உள்ள காரணங்கள் குறித்து அரசு வெளிப்ப டையாக விளக்க வேண் டும்.

தமிழக மக்களின் நல னைக் கருத்தில் கொண்டு, மின்சார உற் பத்தியை அதிகரிப்பதற் கான புதிய திட்டங் களை அரசு உடனடியா கச் செயல்படுத்த வேண் டும். மின் உற்பத்தித் திட்டங்களை முன்னெ டுப்பதை விடுத்து, மின் கட்டணத்தை உயர்த்து வதும், மின்வெட்டுக்கு வழிவகுப்பதும், தனியா ரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதும் மக்களின் சுமையை மேலும் அதிக ரிக்கும்.

மக்களின் வரிப் பணத் தையும், மாநிலத்தின் நிதிநிலையையும் கருத் தில் கொண்டு, மின்சார உற்பத்தியைப் பெருக்கி, நியாயமான விலையில் தடையற்ற மின்சாரம் வழங்குவதே அரசின் கடமையாகும்" என்று பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.



பெரம்பலூர் மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் அ.நடராஜன் தலைமையில் பாலக் கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெக தீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை கழகப் பிரதிநிதிகள் தஞ்சை மாநகர மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, மாநில அயலக அணி துணை செயலாளர் முத்துவேல் ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர் வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.